**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1088/2022**

**Deposition of PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஸ்ரீதரன் | **Age** | : | 60/2026 |
| **Father's Name** | : | திரு. ரங்கசாமி | **Religion** | : | இந்து |
| **Village** | : | ரெங்கநாதபுரம் | **Calling** | : | ஓட்டுநர் (பணி ஓய்வு) |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **31/07/2026.**

எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) எதிரி என்னிடம் கடன் பெற்றதாக சொல்லும் சமயத்தில் நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். 15.6.2022 ஆம் தேதி எதிரி என்னிடம் 10 லட்சம் கேட்டார் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பாக கேட்டார். 15.6.2022 ஆம் தேதி நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி ஒரு வாரத்திற்கு முன்பாக கடன் கேட்டதாக நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) ரங்கநாதபுரம் என்ற களஞ்சியம் என்ற ஊரில் எனது வீட்டில் வைத்துக் கொடுத்தேன். காலை 7 மணி அளவில் கொடுத்தேன். நான் பணம் கொடுத்தபோது எனது குடும்ப நண்பர் மைக்கேல் மற்றும் எனது மனைவி என்னுடன் இருந்தார்கள். எனது குடும்ப நண்பர் மைக்கேல் கரூர் அரவக்குறிச்சியில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

அவருக்கு சொந்த ஊர் சிந்தலைச்சேரி. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் மைக்கேல் அரவக்குறிச்சியில்தான் குடியிருந்து வந்தார் என்றால் அவர் அரவக்குறிச்சியில்தான் குடியிருந்தார் பணம் கொடுத்தபோது என்னுடன் இருந்தார். அவர் இங்கேயும் இருப்பார் அங்கேயும் இருப்பார்.

4) நான் 15.6.2022 ஆம் தேதி எதிரிக்கு பணம் கொடுக்கப் போகிறேன் என்ற விபரம் மைக்களுக்கு எப்படி தெரியும் என்றால் பத்து வருடங்களாக மைக்கேல் சொல்லிதான் எனக்கு எதிரி பழக்கம் 15.6.2022 ஆம் தேதி காலை 7 மணிக்கு எதிரி என்னிடம் வந்து பணம் கேட்டார். நான் பத்து லட்சம் ரூபாய் ரொக்கமாக வைத்திருந்து எதிரிக்கு எடுத்துக் கொடுத்தேன் என்றால் சரிதான். இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் ரொக்கமாக கொடுக்க வேண்டும் என்றால் வங்கி கணக்கின் மூலமாகத்தான் அனுப்ப வேண்டும் என்ற சட்டம் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) எதிரிக்கு சொந்த ஊர் கரூர் அரவக்குறிச்சிக்கு பக்கத்தில் உள்ள பள்ளப்பட்டி என்றால் சரிதான். எதிரிக்கு 10 லட்சம் ரூபாயை திருப்பிக் கொடுக்கும் தகுதி உள்ளதா என்பதை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி பள்ளப்பட்டியில் எஸ் வி எஸ் டிரேடர்ஸ் என்ற பெயரில் கட்டுமான பொருட்கள் விற்பனை செய்து வருகிறார் மேலும் அவர் இன்ஜினியராகவும் உள்ளார் மேலும் இதுகுறித்து எனது நண்பர் மைக்கேல் சொன்னதால் கடன் கொடுத்தேன். நான் இதேபோல் இன்னும் இரண்டு வழக்குகள் மற்ற இரண்டு நபர்கள்மீது தாக்கல் செய்து அதில் மைக்கேல் சொல்லி கடன் கொடுத்ததாக சொல்லி அவர்களிடமிருந்து பணம் வசூல் செய்தேன் என்றால் சரியல்ல.

6) நான் ஏற்கனவே மைக்கேல் என்பவரிடமிருந்து காசோலைகளை வாங்கி என் பெயரில் இரண்டு ஆசிரியர்கள்மீது வழக்கு தாக்கல் செய்து அவர்கள் அரசு பணி செய்வதால் பயந்து கொண்டு என்னிடம் பணத்தை செட்டில் செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி 13.9.2022 என தேதியிட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

காசோலை கொடுத்தார். 13/9/2022 ஆம் தேதி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து கொள்ளலாமா உங்களது வங்கி கணக்கில் பணம் உள்ளதா என எதிரியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஒரு மாதத்திற்கு முன்பாகவே இரண்டு மூன்று முறை போன் செய்தேன் அவரிடம் இருந்து முறையான ரெஸ்பான்ஸ் இல்லை.

7) எதிரியிடம் நான் தொடர்பு கொண்டு கேட்டதாகவும் அவர் அதற்கு ரெஸ்பான்ஸ் செய்யவில்லை என்ற விபரத்தையும் நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்த காசோலைக்கான வங்கி கணக்கு மூடப்பட்டுவிட்டது என காசோலை திருப்பப்பட்டது. எதிரி கொடுத்த காசோலை நான் சொன்ன காரணத்திற்காக திருப்பப்படவில்லை என்றும் அதில் எதிரியையும் அவரது வங்கியையும் தொடர்பு கொண்டு மீண்டும் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யலாம் எனச் சொல்லிதான் திருப்பப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

8) காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்ற விபரத்தை எனது வழக்கறிஞரை சந்தித்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சொன்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்படவில்லை என்பதால் இந்த காசோலையை வைத்து காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. காசோலை பணமின்றி திரும்பிய பிறகு போன் மூலமாகவோ நேரடியாகவோ மைக்கேல் மூலமாகவோ எதிரியை சந்தித்து காசோலை திரும்பியது குறித்து கேட்டேனா என்றால் மைக்கேல் என்பவரிடம்தான் கேட்டேன்.

9) மைக்கேலிடம் இதுகுறித்து கேட்டபோது அவர் தன்னிடம் எதிரி தொடர்பில் இல்லை என சொன்னதால் நான் வழக்கு தாக்கல் செய்தேன். பள்ளப்பட்டிக்கும்

அரவக்குறிச்சிக்கும் 5 கிலோமீட்டர் தொலைவு இருக்குமா என்றால் இருக்கலாம். மைக்கேலிடம் சொல்லி எதிரியை நேரடியாக பார்த்து பணம் குறித்து கேட்க சொன்னேனா என்றால் இல்லை. எதிரி காசோலையை எனது வீட்டில் வைத்து கொடுத்தார் எனது வீட்டில் வைத்து எழுதி கொடுத்தார். காசோலையில் உள்ள தேதி, பெயர் உள்ளிட்ட விபரங்கள் எதிரிதான் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

10) மைக்கேலும் எதிரியும் கட்டுமான நிறுவனத்தில் ஒன்றாக பணிபுரிந்தவர்கள் என்றும் அதன் அடிப்படையில் மைக்கேல் எதிரியின் காசோலையை திருடி வந்து என்னிடம் கொடுத்து நாங்கள் இருவரும் காசோலையை பூர்த்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மைக்கேலும் எதிரியும் ஒன்றாக கட்டுமான நிறுவன பணி புரிந்தார்கள் என்றால் சரிதான். நான் காசோலை வழக்கு தாக்கல் செய்தபிறகு எதிரி மைக்கேல்மீது அரவக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

11) மைக்கேல் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவரை அழைத்து விசாரித்த விபரம் தெரியும். எதிரி என்னிடம் இரண்டு மாதத்தில் திருப்பித் தருவதாக சொல்லி பணம் பத்து லட்சம் வாங்கினார். இரண்டு மாதத்தில் பணத்தை திருப்பித் தருவதாக சொல்லிவிட்டு மூன்று மாதம் கழித்து காசோலையை எழுதி தருகிறீர்களே இரண்டு மாதத்தில் எழுதி தாருங்கள் என கேட்டேனா என்றால் இல்லை. மைக்கேல் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது அரவக்குறிச்சி காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

12) 23.3.2022–ம் தேதி அரவக்குறிச்சி காவல் நிலையத்தில் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். எதிரி என்னை சந்தித்து 15 லட்சம் ரூபாய் பணம் கேட்டதாக அரவக்குறிச்சி போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. நான் அரவக்குறிச்சிக்கு வந்தபோது லோகானந்த் என்பவர் நடத்தி வந்த கடைகளை என்னிடம் காட்டியதன் பேரிலும் நான் லோகானந்த் மீது நம்பிக்கை கொண்டு என்னிடம் சேமிப்பாக இருந்த ரூபாய் 6 லட்சம் பணத்தையும் எனது நண்பர் கண்ணன் என்பவரிடமிருந்து ரூபாய் 14 லட்சத்தையும் வாங்கி 15.6.2022ஆம் தேதி எனது ஊரில் வைத்து லோகானந்திற்கு பணம் கொடுத்தேன் என போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

13) நான் கொடுத்ததாக சொல்லும் 10 லட்சம் பணத்தில் 6 லட்சம் பணம் என்னுடையது என்றும் 4 லட்சம் பணம் கண்ணன் என்பவருடையது என்றும் சொன்னால் சரிதான். கண்ணன் என்பவருடைய பணம் ரூபாய் 4 லட்சம் இருப்பதாக நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை முழு பணமும் என்னுடையதுதான். நான்கு மாத காலத்தில் பணத்தை திருப்பித் தருவதாக சொல்லியதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை.

14) போலீசார் விசாரித்தபோது காசோலைக்கு பணம் இல்லை என வங்கியில் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் எதார்த்தமாக சொன்னேன் காசோலை திரும்பிவிட்டதாக சொன்னேன். கம்பம் கிளையில் சம்பவ சமயத்தில் ஓட்டுநராக இருந்தேன் கம்பத்திலிருந்து திருச்சி செல்லும் பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்தேன். காலை 5 மணிக்கு கம்பத்தில் பேருந்தை எடுத்து திருச்சிக்கு செல்வேன். இந்த வண்டியில் ஓட்டுனராக பணியில்

இருந்தபோது ஒருநாள் வேலையும் ஒருநாள் ஓய்வும் கிடைக்கும் என்றால் சரிதான்.

15) 15.6.2022−ம் தேதி நான் பணியில் இருந்தேன் என்றால் இல்லை. 15.6.2022−ம் தேதி நான் பணியில் இருந்தேன் என்றும் இல்லை என வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் பணியில் இல்லை என நிரூபிக்க நான் பணிபுரிந்த நிறுவனத்தில் வருகை பதிவேட்டை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அவர்கள் கொடுக்க மாட்டார்கள். நான் மனு கொடுத்தால் அவர்கள் வருகை பதிவேட்டை தருவார்கள் என்றும் அது எனக்கு எதிராக இருக்கும் என்பதால்தான் அவர்கள் வருகை பதிவேட்டை தரமாட்டார்கள் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

16) மைக்கேல் திருடி வந்த காசோலையை வைத்து எதிரி எழுதாத காசோலையை நாங்கள் பூர்த்தி செய்து கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.31 17:37:18 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**